**செ.வெ.எண்: 16 / ஆகஸ்ட் / 2021** **நாள்:06.08.2021**

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூபாய் 28.42 கோடி மதிப்பில் குடிநீர் ஆதாரம் மேம்படுத்தும் பணிகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று(06.08.2021) உறையூர் குடிநீர்த் தொட்டி வளாகத்தில் தொடங்கி வைத்தார்.**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூபாய் 28.42 கோடி மதிப்பில் குடிநீர் ஆதாரம் மேம்படுத்தும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (06.08.2021) உறையூர் குடிநீர்த் தொட்டி வளாகத்தில் தொடங்கி வைத்தார்.

பின்னர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

திருச்சிராப்பள்ளி நகராட்சி காலத்தில் காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்ட பெரியார் நகர். அய்யாளம்மன் படித்துறை நீர்சேகரிப்பு கிணறுகளிலிருந்து கூடுதலாக நீர் ஆதாரம் பெறும் வகையில், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் (ABD Areas) வசிக்கும் பொதுமக்களுக்கு போதிய அழுத்தத்துடன் சீரான அளவில் குடிநீர் வழங்கும் நோக்கில் பெரியார் நகர், கம்பரசம்பேட்டை நீர்சேகரிப்பு கிணற்றில் புதிதாக நீள்சுற்று வட்டக் குழாய்கள் அமைத்தல், புதிதாக மோட்டார் பம்பு செட் மற்றும் டீசல் ஜெனரேட்டர் அமைத்தல் மற்றும் புதிதாக முதன்மை சமநிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல், நீர் பரிசோதனை ஆய்வகம் அமைத்தல், நடைபாலம் மற்றும் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி ஆகியவைகளை மறுசீரமைத்தல் மற்றும் நீர் சேமிப்புக் கிணறு பெரியார் நகர் கம்பரசம்பேட்டையிலிருந்து, அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD Arco) உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு புதிதாக 17.50 கி.மீட்டருக்கு குடிநீர் உந்து குழாய் பதித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள 3 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு ரூ.50,00 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்திட்டப் பணிகள் மூலம் வரையறுக்கப்பட்ட பகுதிகள் (ABD Areas) உட்பட வார்டு எண்: 8,9,10,11,12,13,15,16,17,18,19,50,51,52,55,56,57,58 ஆசு மொத்தம் 18 வார்டுகளில் உள்ள குடியிருப்பாளர்கள் பயன்பெறுமாறு 55155 விட்டிணைப்புகள் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் தற்போது ரூபாய் 8.96 கோடி மதிப்பில் பெரியார் நகர், கம்பரசம்பேட்டை நீர்சேகரிப்பு கிணற்றில் புதிதாக நீள்சுற்று வட்டக் குழாய்கள் அமைத்தல், புதிதாக மோட்டார் பம்பு செட் மற்றும் டீசல் ஜெனரேட்டர் அமைத்தல் மற்றும் ரூபாய் 19.46 கோடி மதிப்பில் புதிதாக முதன்மை சமநிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல், நீர் பரிசோதனை ஆய்வகம் அமைத்தல், நடைபாலம் மற்றும் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி மறுசீரமைத்தல் என மொத்தம் 28.42 கோடி மதிப்பிலான பணிகள் இன்று(06.08.2021) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இப் பணிகள் ஜீலை 2023 உடன் முடிக்கப் பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையர் திரு.ப.மு.நெ.முஜிபுர் ரகுமான், மாநகராட்சி செயற் பொறியாளர்கள் திரு.சிவபாதம், திரு.குமரேசன், மாநகராட்சி உதவி ஆணையர் திரு.செல்வபாலாஜி, முன்னாள் துணை மேயர் மு.அன்பழகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருச்சிராப்பள்ளி.**